23rd September 1961]

Legal assistance to the poor

*1759 *Q*—Sri S. M. ANNAMALAI:
Sri T. T. DANIEL:
Sri M. P. SARATHY:
} கனம் உள்துறை அமைச்சர்

தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) ஏழைகளுக்கு சட்ட உதவி செய்வதைக் குறித்து மத்திய சர்க்கார் மாநில சர்க்காரின் ஆலோசனையைக் கேட்டார்களா ?

(இ) அப்படியானால், மாநில சர்க்காரின் பதிலென்ன ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (அ) The Government of India enquired whether the State Government have formulated any Scheme for " Legal aid to the poor ".

(இ) The question of formulating a Scheme for " Legal aid to the poor " by the State Government is under consideration and no reply has yet been given to the Government of India.

Sri S. M. ANNAMALAI : ஸார், சாதாரணமாக ஏழைகளுக்கு சட்ட உதவி கிடைக்காமல் அவர்கள் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள். ஆகவே இதை சர்க்கார் உடனடியாக கவனித்து—மத்திய அரசாங்கம் கூட ஸ்டாம்பு விற்பனையில் ஒரு பகுதியை இதற்காக எடுத்துக் கொள்ளலாம் என்று சொல்லியிருக்கிறது—ஆகவே அதை உபயோகித்தாவது ஏழைகளுக்கு உதவி கொடுக்க சர்க்கார் முன் வருமா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : இந்த சட்டமன்றத்தின் ஆயுள் காலத்தில் இதற்கான முடிவைக் கொண்டு வந்து விடலாம் என்று எதிர்ப்பார்ப்பதற்கில்லை. பொதுத்தேர்தல் வந்து புது அரசாங்கம் வந்த பிறகு தான் இந்த முடிவை செயல்படுத்த முடியும் என்று நினைக்கிறேன்.

Sri T. T. DANIEL : May I know whether at present any legal aid is given to the poor people, to any type of civil cases?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : I do not think so.

Sri M. KALYANASUNDARAM : ஸார், அரசாங்கத்தினுடைய ஆலோசனையிலிருந்து வரும் திட்டங்கள் எவையெல்லாம் என்பதை அறிவிக்க முடியுமா ? இவைகள் எல்லாம் சட்டசபை முன்பு வந்துதான் நிறைவேற்றப்படவேண்டும் என்ற அவசியமிருக்கிறதா ? நிர்வாக உத்திரவுகள் மூலமாக இவைகளை நிறைவேற்ற முடியாதா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : இதுவும் பரிசீலனை செய்ய வேண்டிய விஷயம். இதில் எந்த விதமாக முடிவு எடுக்க வேண்டும் என்று இன்னும் தீர்மானிக்கவில்லை. ஆகவே இப்போது என்ன யோசனைகள் இருக்கின்றன என்று சொல்லுவதற்கில்லை. பல சிக்கல்கள் வருகின்றன. அவைகளை எல்லாம் பரிசீலனை செய்ய வேண்டும். அதோடு இதற்காக எவ்வளவு செலவாகும் என்பதைப் பற்றியும் கவனிக்க வேண்டியிருக்கிறது.

Sri R. SRINIVASA IYER : What is the standard of poverty to enable a person to be entitled to free legal aid? Are the Government aware that almost all the legal practitioners conduct the cases entrusted to them whether fees are received by them or not and even if there are arrears in payment of pleader's fees? Not one suit has been filed so far against the non-payment of pleader's fees.

The Hon. Sri M. BHAKTAVATSALAM : If that is so I should express my appreciation to the lawyers.